"மழைநீர் சேமிப்போம்" " பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் "

நகராட்சி அலுவலகம்,
தேனி – அல்லிநகரம் ,
நாள் : 14.07.2020.

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 சார்வரி, ஆனி மாதம் 30 -ம் நாள் 14.07.2020 செவ்வாய்க்கிழமை காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி

**பொருள் 01 :**

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பழுதடைந்துள்ள கீழ்கண்ட விபரப்படியான தெருக்களில் உள்ள சாலையினை தார் சாலையாக சீரமைக்கும் பணிகள் மற்றும் பேவர் பிளாக் சாலைப்பணிகள் மேற்கொள்ளுவதற்கு ரூ. 183.00 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் ,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 17349 / 2019 / இ3 நாள்.14.07.2020 ல் மேற்கண்ட பணிகளை தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2020 - 2021 ன் கீழ் அரசு மான்யமாக தொகை ரூ.137.25 இலட்சம் மற்றும் நகராட்சிப் பங்குத் தொகை ரூ.45.75 இலட்சம் சேர்த்து ஆக மொத்தமாக ரூ.183.00 இலட்சம் நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் செய்வதற்கு உரிய நிர்வாக அனுமதி, மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னனை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Package | Name of Work | Est.Cost ( Rs.In Lakhs ) |
|---|---|---|
| 1 | Relaying of BT Road at Aranmanaipudhur scheme road ( 40' Road ), Aranmanaipudhur scheme road ( 60' Road ) , Master plan Complex road ( Employment, CEO and RTO Office Road ), Master Plan Complex road ( Collector Office Road ), Rice Mill Street, Power House Street at Ward No : 22, 25, 31 & 32 and Providing Paver Black Road Mandukaruppasamy Kovil Street, Kurunjinagar East Cross Street at Ward No : 11, 12 in Theni Allinagaram Municipality. | 183.00 |

**அலுவலகக்குறிப்பு** :-

1) தேர்வு செய்யப்பட்டுள்ள தெருக்களில் சாலைப்பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட திட்டத்திற்கு அரசு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிதிப்பகிர்வில் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்கண்ட திட்டத்திற்கு நகராட்சி பங்கு தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 3374 / 2018 / இ1

**தீர்மான எண்:** 1495
**தீர்மானம்** : வரிசை எண். 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 02 :

தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக கட்டடத்தில் காவல் பணிக்கு முன்னாள் படைவீரர் வாரியத்தின் ( TEXCO ) மூலம் தினசரி 3 பணியாளர்கள் வீதம் நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிலையில் மேற்படி பணியாளர்களுக்கு கீழ்கண்ட விபரப்படி 01.04.2020 ம் தேதி முதல் திருத்திய ஊதியம் வழங்குவதற்கு TEXCO நிறுவனத்தின் கடித எண். 8157 / 8175 / TNMW / Revised VDA 2020, Dated : 04.06.2020 - ம் தேதியில் கடிதம் வரப்பெற்றுள்ளது.

**( ஒரு பணியாளருக்கு )**

| வ. எண். | தற்போது வழங்கப்படும் ஊதியம் விகிதம் | | | 01.04.2020 முதல் வழங்கப்பட உள்ள ஊதியம் விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | அடிப்படை ஊதியம் | மொத்த ஊதியம் ( இதர வரிகள் உட்பட ) | | அடிப்படை ஊதியம் | மொத்த ஊதியம் ( இதர வரிகள் உட்பட ) |
| 1 | 16639 | 21990 | | 19239 | 25426 |

இந்நிலையில் மேற்படி பணியாளர்கள் 01.04.2020 முதல் 31.03.2021 வரை பணிபுரியும் காலங்களுக்கு நகர்மன்றத் தீர்மான எண். 1389, நாள்.10.03.2020-ம் தேதியில் பொதுநிதியின் கீழ் ரூ. 8.50 இலட்சத்திற்கு செலவினம் மேற்கொள்ளுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் விபரப்படியான கடிதத்தில் தெரிவித்துள்ளபடி பணியாளருக்கு 01.04.2020 முதல் உயர்வு செய்து வழங்கப்பட உள்ள ஊதியம் விகிதத்தின் படி வழங்குவதற்கு இன்னும் கூடுதலாக உத்தேச செலவினமாக ரூ.1.00 இலட்சம் ஆகும். கூடுதல் செலவினத்தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 950 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1496
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 03 :</u>

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் ( வைகை அணையின் ஆதாரமாகக்கொண்டு ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்ற நிலையில், இத்திட்டத்தினை 21.02.2020 ம் நாளில் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தினை இயக்குதல் பணியினை கடந்த ஏப்ரல்-2020 முதல் ஜூன்-2020 மாதம் வரை ( 3 மாத காலத்திற்கு குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை மேற்கொண்ட ஒப்பந்ததாரரான M/s. RCM Ifrastracture, ltd,Hyderabad என்ற நிறுவனத்தின் துணை ஒப்பந்ததாரரும், ஏற்கெனவே இயக்குதல் மற்றும் பாமரிப்பு பணியினை செய்து வந்த M / s. Ujwala Infratech ( India ) Pvt. Ltd. Tirupathi என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். 1465. நாள். 05.06.2020 ன் படி மன்றத்தின் அனுமதி பெற்று மேற்கண்ட இயக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், இப்பணிக்கான நிர்வாக அனுமதி வழங்கக்கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய திட்ட மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், கடந்த மூன்று மாதங்களாக கொரானா வைரஸ் நோய் அதிகமாக பரவி வரும் நிலையில் தற்போது நோய் பரவல் குறையாமல் உள்ளதால், நிர்வாக அனுமதி பெற முடியாத சூழ்நிலை உள்ளது.

எனவே பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் பொருட்டு மேற்படி இயக்குதல் பணியினை, எற்கெனவே பார்த்து வரும் நிறுவனத்தின்மூலம் அதே எண்ணிக்கை பணியாட்களை கொண்டு ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள தினக்கூலி GST, EPF மற்றும் Insurance அடிப்படையில் வருகின்ற ஜூலை -2020 முதல் செப்டம்பர்-2020 வரை மூன்று மாதங்களுக்கு மேற்கண்ட பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பராமரிப்பு பணி அவசர அவசியம் கருதி, மன்றத்தின் முன் அனுமதியை எதிர் நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகிரிக்கலாம்.

**ந.க.எண்.650 /2020/ இ2**

**தீர்மான எண்:** 1497
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 04 :

தேனி -அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 21, கே.ஆர்.ஆர். நகர் பொதுமக்கள் வனத்துறை அலுவலகம் அருகில் அமைந்துள்ள பாலவிநாயகர் திருக்கோவிலுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்கக்கோரிள்ளார்கள். அதன்படி விண்ணப்பம் நகரமைப்பு அலுவலரின் குறிப்புக்கு அனுப்பப்பட்டதில், மேற்கண்ட இடம் தேனி- அல்லிநகரம நகராட்சிக்குட்பட்ட சர்வே எண். 2354 ல் அங்கீகரிக்கப்பட்ட மனையிடமாக ம.து / ந.ஊ.இ.எண்-881/1996 ல் ( கோப்பு எண். 28058/1996/ எப்1 ) உள்ளதை ம.பி. எல்.டி/ ஆல் ( எம்.ஆர் ) எண். -85/1982) யை திருத்திய தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் மேற்படி இடம் இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட ஆவண எண். 4196/2004. நாள் 09.03.20044196/2004 ன்படி திறந்த வெளி இடமாக உள்ளது. மேற்படி கோயில் கட்டிடம் ஆக்கிரமிப்பில் உள்ளததாக துணைப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும்,வருவாய் ஆய்வாளர் குறிப்பின் படி மேற்கண்ட கோயிலுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட இனத்தின் கீழ் புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்கலாம் என தெரிவித்துள்ளார். எனவே, மேற்கண்ட ஆவணங்கள் அடிப்படையிலும், வருவாய் ஆய்வாளர் குறிப்பின்படியும், மேற்ண்ட பாலவிநாயகர் திருக்கோயிலுக்கு பொது மக்கள் அடிக்கடி வந்து செல்வதாலும், குடிநீர் பயன்பாடு அவசியமாக உள்ளதை கருத்தில் கொண்டும் வரிவிலக்களிக்கப்பட்ட இனத்தின் கீழ், ஆணையாளர், தேனி - அல்லிநகரம் நகராட்சி என்ற பெயரில் புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்கவும் அதற்கான குடிநீர் கட்டணத்தினை கே. அ. ஆர். நகர் குடியிருப்போர் நலச்சங்கம், தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 331 / 2020/இ2

**தீர்மான எண்:** 1498
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 05 :

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12, வள்ளிநகர் பகுதியில் பகீர்மானக்குழாய்கள் பதிக்கும் பணி மற்றும் வால்வுத்தொட்டிகள் அமைக்கும் பணிக்கு 10.06.2020 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.T.இரமேஷ்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 155568.07 | 0.05 % குறைவு |
| 2. | திரு. சிட்டு, நகராட்சி ஒப்பந்ததாரர் | 160566.77 | 3.16 % அதிகம் |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. T. இரமேஷ், நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 339 / 2020/இ2

**தீர்மான எண்:** 1499
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 06 :

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகளுக்குரிய **On / Off சுவிட்ச் பாக்ஸ்கள்** 50 எண்ணம் சப்ளை செய்தல் மற்றும் பொருத்துதல் பணிக்கு 10.06.2020 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு. M/s அஜந்தா எலக்ட்ரிக்கல்ஸ்,<br>சென்னை | 494250.00 | 0.13 % அதிகம் |
| 2. | திருM/s.S.S.எலக்ட்ரிக்கல்ஸ்,<br>காரைக்குடி | 493100.00 | 0.10 % குறைவு |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.10 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. M/s.S.S.எலக்ட்ரிக்கல்ஸ், காரைக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 903 / 2020/இ2

**தீர்மான எண்:** 1500
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 07 :</u>

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான அரப்படித்தேவன்பட்டி நீரேற்று நிலையத்தில் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு 10.06.2020 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.T.இரமேஷ்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 476722.59 | 0.03 % குறைவு |
| 2. | திரு. S.சிட்டு<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 488523.59 | 2.444 % அதிகம் |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. T. இரமேஷ், நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1271 / 2020/இ2

**தீர்மான எண்:** 1501
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 08 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி **கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் அடித்தளப்பகுதி செகண்டரி பிளாக் கடை எண்: 58** குத்தகை விடுவதற்கு 26-06-2020 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.A.பார்த்திபன்,<br>த/பெ. அம்மையப்பன்,<br>சுண்ணாம்பு காலவாசல் தெரு,<br>பங்களாமேடு.<br>தேனி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு **ரூ:3,004/-** |

| | | | |
|---|---|---|---|
| 2 | திரு.G.வேல்முருகன், த/பெ. கோவிந்தராஜன், நேருஜி ரோடு, பொம்மயகவுண்டன் பட்டி, தேனி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு **ரூ:2,500/-** |

<u>**அலுவலக குறிப்பு :-**</u>

அ) மேற்கண்ட இனத்திற்கு வரிசை எண்:1-ல் கண்ட **திரு.A.பார்த்திபன்** என்பவர் மாத வாடகையாக **ரூ:3,004/-** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட கடைக்கு ஏற்கனவே அதிகமான மாத வாடகை இருந்ததால் தொடர்ந்து வாடகை செலுத்த இயலாமல் நகராட்சி வசம் கடையினை 30-06-2020-ல் ஒப்படைக்கப்பட்டள்ளது. மேற்கண்ட கடைக்கு 22-05-2020, 09-06-2020 மற்றும் 19-06-2020 தேதிகளில் மூன்று முறை ஏலம் கோரப்பட்டும் யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. ஏற்கனவே பேருந்து நிலையம் அருகாமையில் உள்ள தனியார் இடங்களில் குறைந்த மாத வாடகைக்கு கூடுதல் சதுரஅடியில் பெருமளவு கடைகள் வந்துள்ளதால் பேருந்து நிலைய கடைகளுக்கு பொது மக்கள் யாரும் வருவதில்லை. மேலும் தற்போது நான்கு மாதங்களாக ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதால் பேருந்து நிலையம் இயங்காமல் உள்ளது. எனவே நகராட்சி நிதிநிலையினை கருதி மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: 1107 / 2020 / அ-3

**தீர்மான எண்:** 1502
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>**பொருள் 09 :**</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் புதிய குழாய் பதிக்காத தெருவில் ஏற்கெனவே உள்ள பைப்பில் இருந்து புதிய குழாயில் பழைய குழாய்க்கு புதிய பிவிசி பைப்கள் பழைய குழாய்க்கு இணைக்கும் பணி மேற்கொள்ளும் பணிக்கு 18.10.2019 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | M/s. Ujwala Infratech(India ) Pvt. Ltd. Tiruppathi | 850782.00 | 0.06 % குறைவு |
| 2. | T.Thavamani.Contrator, Thirumalapuram | 854081.00 | 0.32 % கூடுதல் |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.06 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/s. Ujwala Infratech(India ) Pvt. Ltd. Tiruppathi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) நகர்மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 916 / 2019 / இ2

**தீர்மான எண்:** 1503
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 10 :

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகத்திற்கு பதிக்கப்பட்டுள்ள பகீர்மானக்குாய்கள் மற்றும் பம்பிங் மெயின் லைன்களில் ஏற்படுகின்ற கசிவுகள் மற்றும் உடைப்புகளை சரி செய்யப்படவேண்டியுள்ளது. எனவே பணியை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேசச்செலவினம் தொகை ரூ. 8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1800 / 2020 / இ2

**தீர்மான எண்:** 1504
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 11 :

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பழனிசெட்டிப்பட்டி பழைய மற்றும் புதிய குடிநீர் திட்டத்திலிருந்து 33 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விநியோகிக்கப்படுகின்ற குடிநீரில் குளோரின் கலக்கப்பட்டு சுத்தமான சுகாதாரமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அதற்கேற்றவாறு குளோரினேசன் சப்ளை செய்யவேண்டியுள்ளது. எனவே,2020-2021 ம் ஆண்டிற்கு தேவையான குளோரினேசன் சப்ளை செய்யவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ.4.25 இலட்சம் ( நான்கு இலட்சத்தி இருபத்தி ஐந்தாயிரம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 1801 / 2020 / இ2

**தீர்மான எண்:** 1505
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) சே.நாகராஜன்
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி